ISSN:2582-9599



# முத்தமிழறிஞர் படைத்த நாடகத்தமிழ்

**முனைவர் கே. இரா. கமலாமுருகன்**

**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, இராணிமேரி கல்லூரி.**

kamalamurugan_tamil@queenmary'scollege.edu.in

**21**

**ஆய்வுச்சுருக்கம்**

உலகில் பிறந்து சிறந்த மொழிகளுக்கிடையே சிறந்தே பிறந்த மொழியாக நம்முடைய இன்தமிழ்மொழி அமைகின்றது. அத்தகைய சிறப்பிற்குக் காரணம் முத்தமிழ் மொழியாக தமிழ்மொழி நடமிடுவதனாலேயே ஆகும். அவ்வகையில் சிறப்புடைய நாடகத்தமிழ் வாழ்வின் ஒரு பகுதியாகவும் தமிழ் ஒரு கூறாகவும் அமைந்து இலக்கிய வகையில் தனக்கான ஓர் இடத்தினைக் காலம் காலமாகத் தக்கவைத்துக் கொண்டுள்ளதனை நாம் தமிழ் இலக்கிய வரலாற்றின் பதிவுகளில் காண இயலுகின்றது. அவ்வகையில் காலந்தோறும் தம்மை சிறப்புற வளர்த்தமைத்து வரும் நாடகத்தமிழ் வளர்ச்சியில் முத்தமிழறிஞராகவும் போற்றப்படும் கலைஞர் படைத்தளித்த நாடகத்தமிழ் குறித்த அறிமுகத்தினை எடுத்துரைப்பதாக இவ்ஆய்வு அமைகின்றது.

**முத்தமிழறிஞரின் சிறப்புகள்**

ஒவ்வொரு மனிதருக்குள்ளும் திறமைகள் உள்ளன. அவற்றைத் தெரிந்து புரிந்து வளர்ந்து ஆளுமையாக மாறுதல் என்பது யாவர்க்கும் எளிதான ஒன்று அல்ல. ஆனால் அவற்றைக் கடந்து தமது இலக்கியப் பயணத்திலும் அரசியல் பயணத்திலும் ஒருசேர மாபெரும் வெற்றியினை எட்டிப்பிடித்து சூரியனாகவே ஒளிவீசும் உன்னதமுடையவரே நம் முத்தமிழறிஞர் அவர்கள். குறிப்பாக இன்தமிழ் மொழிக்கும் தமிழ் இலக்கிய உலகிற்கும் திரைத்துறை உலகிலும் அவரது எழுத்துப்பயணம் எண்ணற்ற சுவையினையும், புரட்சியினையும், கற்பனை நயத்தினையும் ஏந்திப் பயணித்தது! அவ்வகையில் சங்க இலக்கியப்பிழிவு, கதை, கவிதை, நாடகம் என தமிழ் இலக்கிய வகைகள் அனைத்திலும் விழுதாகவும் வேராகவும் விருட்சமாகவும் எழுந்து நின்றன அவரது படைப்புகள். அவற்றுள் நாடக இலக்கியச்சிறப்புகளை மட்டும் எடுத்துரைப்பதாக இவ்ஆய்வு அமைகின்றது.

**நாடகத்தமிழ்**

முத்தமிழில் ஒன்றான நாடகத்தமிழ் பன்னெடுங்காலம் முன்பாகவே நம்முடைய தமிழர் வாழ்வில் மிகப்பெரும் முக்கியத்துவம் வாய்ந்த கலையாகக் கலந்து வளர்ந்துள்ளது என்பதனை இலக்கிய இலக்கண நூல்கள் வழி உணர முடிகின்றது.

**தமிழின் தொன்மையான தொல்காப்பியம்**

"நாடக வழக்கினும் உலகியல்
வழக்கினும் பாடல் சான்ற
புலனெறி வழக்கம்"[1]

-தொல் - அகத்திணை - 58

என்று எடுத்துரைக்கின்றது.

நடிப்பு என்பது அன்றைய மக்கள் கலையாக நாட்டுப்புறக் கலைகளின் வகைகளில் ஒன்றான சாத்து வகையாக அமைந்திருந்தது என்பதனை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. அந்தக் கூத்து வகையில் ஒன்றாக அமைந்திருந்தது வரிக்கூத்து நடிக்கும் செயலை ஒட்டியே பெரும்பான்மை

அமைந்தது என்பதனையும்,

“வரி என்றால் அவரவர் பிறந்த நிலத்திற்கு ஏற்ப தொழிற்தன்மையும் தோன்ற நடித்தல்” என்பதனை,

“வரியெனப் படுவது வகுக்குங் காலைப்
பிறந்த நிலத்தினுஞ் சிறந்த தொழிலும்
அறியக் கூறி யாற்றுழி வழங்கல்”[2]

(பக். 144 - 145)

என்று அடியார்க்கு நல்லார் தம் உரையில் விளக்குகின்றார். (தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்)

பிற இலக்கியங்கள் கூத்து என்பதனை

“கூத்தாட்டு அவைக் குழாந்தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அது விளிந்தற்று”[3]

(குறள் எண் - 332)

என்றும்

“நாடக மகளிர் ஆடுகளத்து
எடுத்து விசிவீங்கு இள்ளியம் கடுப்ப”[4]

என்றும் மற்றும் பல குறிப்புகளால் பிற சங்க இலக்கியங்களும், கூத்துக்கலையினையும் - அதனுள் பயின்ற நாடகம் என்ற சொல் வழக்கினையும் காணும்போது இதன் பழமை உணர இயலுகின்றது.

மதிவாணனார் என்பார் எழுதிய நாடகத்தமிழ் என்றும் நூலும் செயற்றியனார் என்பவர் இயற்றிய செயிற்றியம் என்னும் நூலும் நாடக இலக்கணங்களைக் கூறும் வகையில் அமைந்த நூல்கள் “செய்முறை என்றும் நூலும் இருந்தது”[5] (ப.128 மயிலை சீன வேங்கடசாமி நாட்டாரின் தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்) - என்று சுட்டுகின்றார். சிலம்பு நாடகக்கலைக்கு உயர்வூட்டிய நூல் எனலாம்.

காலத்திற்கு ஏற்ப இன்றைய சூழலில் முழுமையான நாடகங்களே இயற்றவும் நடக்கவும் உருவாக்கப்படுகின்றன. அவ்வகையில் எழுந்த கலைஞர்களில் முத்தமிழறிஞர் தனக்கெனத் தனியிடத்தினைத் தம் படைப்புகளால் அமைத்துக் கொண்டுள்ளார்.

தூக்குமேடை, மகான் பெற்ற மகான் போன்ற சமூக சீர்திருத்த நாடகங்களும், நச்சுக்கோப்பை சாக்கிரட்டீசு போன்ற நாடகங்கள் பகுத்தறிவுச் சூழல்களை உணர்த்தவும் மற்றும் சில வேறு பல சூழல்களை ஒட்டியும் எழுந்துள்ளன.

**முத்தமிழறிஞரின் நாடகத்தமிழ்**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலில் இயற்றிய அரங்கேற்றிய நாடகம் ‘பழனியப்பன் என்னும் சாந்தா’ என்ற கதையாகும். 1944-இல் திருவாரூர் பேபி டாக்கிஸ் என்ற அரங்கில் அது நிகழ்த்தப்பட்டது. பின்னாளில் இதே கதையினைத்தான் இன்று பலரும் அறிந்துள்ள நாடகமான ‘நச்சுக்கோப்பை’ என்று பெயர் மாற்றம் செய்து தமிழ்நாடு முழுவதும் வெளியிட்டார்கள்.

அவ்வாறே ஐம்பெரும்காப்பியங்களில் ‘கொலையும் செய்வாள் பத்தினி’ என்ற பழமொழியின் விளக்கமாக உள்ள குண்டலகேசியினை உள்வாங்கியதன் விளைவாக மந்திரகுமாரி என்ற

நாடகத்தினை எழுதி அதனையும் திருவாரூரிலேயே அரங்கேற்றம் காணச் செய்தார்.

முதலில் தேவி நாடகச் சபையினருக்காக படைக்கப்பட்ட இந்தக் கதையின் சிறப்பு காரணமாக தொடர்ந்து திரைப்படமாகவும் வெளிவந்து மக்களின் பெருத்த வரவேற்பை கலைஞருக்கும் எம்ஜிஆருக்கும் சேர்த்தே பெற்றுத் தந்தன என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

இவற்றைத் தொடர்ந்து பல நாடகங்கள் தோன்றத் தொடங்கின.

அனைத்தினுக்கும் முன்னோடியாக பள்ளி நாட்களிலேயே பிரேத விசாரணை என்ற நாடகத்தினைப் படைத்துள்ளார்.

நச்சுக்கோப்பை மதுவின் தீமையினை எடுத்துணர்த்தும் வகையில் அமைந்தது. அதனுடைய வெற்றிக்குக் காரணம். சாந்தா தன் எதிர்வீட்டு ஏகாம்பரத்தை விரும்புகிறார். இதனை அறிந்த சாந்தாவின் சகோதரன் ஏற்றுக்கொள்கிறான். ஆனால் சாந்தாவின் தந்தையான முனியப்ப முதலியார் ஏகாம்பரம் ஏழை என்பதனைக் காரணம் காட்டி அவர்களது காதலை எதிர்த்துத் தடைசெய்து, சாந்தாவை அழகப்பன் என்பவனுக்குத் திருமணம் செய்துவைக்கிறார். ஆனால் அவன் ஒரு குடிகாரன், சீட்டு ஆடுபவன், இதனால் இளமையிலேயே சாந்தா விதவை ஆகிறாள். சாந்தாவைத் திருமணம் செய்துகொள்ள முடியாத சோகத்துடன் ஏகாம்பரம் இராணுவத்தில் சேர்ந்து பல வருடம் கழித்து திரும்ப ஊருக்கு வருகின்றான். ஏகாம்பரத்தைக் கண்ட பழனியப்பன் மீண்டும் சாந்தா ஏகாம்பரம் இருவரையும் திருமணம் மூலம் இணைக்க நினைக்கிறான். ஆனால் துரதிர்ஷ்டவசமாக யாரோ சிலர் பழனியப்பனைக் கத்தியால் குத்திக்கொன்று விடுகின்றனர். ஆனாலும் பழனியப்பன் நண்பனான சிவகுரு என்பவர் மீண்டும் சாந்தா ஏகாம்பரம் இருவரின் திருமணத்தை நிகழ்த்துவதாக இக்கதை அமைந்தது.

முழுமையாக மதுவின் கொடுமை குடும்பத்தின் பாதிப்பு பெண்களின் பரிதவிப்பு எனப் பல கோணங்களில் இக்கதை அமைந்தது.

காகிதப்பூ நாடகம் அரசியல் பின்னணியில் உருவாக்கப்பட்டது. எனவே அது பல லட்சம் வசூல் கண்டது என்று அதனைப் பற்றித் தெரிந்தவர்கள் பதிவு செய்துள்ளார்கள்.

அரசியலை மையமிட்டதாகவே தூக்குமேடை, உதயசூரியன், பரப்பிரம்மம், காகிதப்பூ போன்ற நாடகங்கள் எழுதப்பட்டது மட்டுமின்றி, அவை அரசியலில் பெரும் மாற்றங்களை உண்டாக்கவும் செய்தன.

தூக்குமேடை நாடகத்தின் போதுதான் எம்.ஆர்.ராதா முத்தமிழறிஞர் அவர்களுக்கு ‘கலைஞர்’ என்ற பட்டத்தினை வழங்கினார். காலப்போக்கில் முத்துவேல் கருணாநிதி மறக்கப்பட்டு ‘கலைஞர்’ என்ற சொல்லே காவியப் புகழாக்கியது.

கலைஞரின் நாடகத்தமிழ் ஆக்கத்தில் சிலப்பதிகார நாடகம் முக்கிய இடம்பெறுகின்றது. அதனை அப்படியே உள்வாங்கி தன் படைப்பாக்கத்தினையும், தமிழ் ஆர்வத்தினையும் சேர்த்தே தம் சிலம்புப் படையலை அமைத்தார் கலைஞர்.

தமிழர் தம் பழம்பெருமையினையும் நாகரீகத் தொன்மையினையும், வணிக வளத்தினையும் தமிழின் மேம்பாட்டுக்கும் பெருமை சேர்த்து பூம்புகாரைக் காட்டி திரையில் காட்சிப்படுத்தினார். தமது கொள்கையிலும் மாறுபடாமல் இந்நூல் அமைந்தது என்பது இதன் சிறப்பு.

சமயச் செய்திகள் தவிர்க்கப்பட்டது. அரசாங்க ஊழியர்களின் ஊழலைக் கூறும் வகையில்

பொற்கொல்லனுக்கு பதில் அரசாங்க ஊழியனேத் திருடினான் என்று அமைத்தார்.

கோவலன் மாதவியை நாடியது அவனது தமிழ்மொழிப்பற்றே காரணம் எனவும் காட்டினார்.

கனக விசயர்கள் தமிழர்களைத் தரக்குறைவாக பேசியதான வஞ்சிக்காண்டத்தில் தமது வீரவசனத்தை அரசியல் சாடலை சேரன் செங்குட்டுவன் வாய்மொழியாக அமைத்து

“என் தமிழை அல்லவா இகழ்ந்தார்கள். தருக்கர்கள் ஆகா…

குறள் தந்த கோமானே, வள்ளுவனே! உம்மை இகழ்ந்தார்கள்.

அத்தாணி மண்டபத்தில் சத்தான கருத்துரைக்கும் சாத்தனாரே -
உம்மை இகழ்ந்தார்கள். பாவாணரே!

ஐந்தாம் பத்துப் பாடிய அன்புப் பரணரே! அரங்கின் அண்ணலே!

உம்மை இகழ்ந்தார்கள்”[6]

கா. 37 ப.89 - சிலப்பதிகார நாடகக் காப்பியம் - கலைஞர் கருணாநிதி,

பாரதி பதிப்பகம் - சென்னை - 92

என்று பேசுகின்றவை உள்ளிட்ட பல்வேறு சிறப்புகளுடன் இந்நூல் அமைந்திருந்தது.

அறிஞர் அண்ணா கதையில் கருணாநிதி செய்துள்ள சில மாற்றங்கள் இளங்கோவடிகளைக் கலந்துகொண்டு செய்தது போல் திகழ்கின்றன என்று புகழ்ந்துள்ளார்.

நெஞ்சுக்கு நீதி முதல் பாகத்தில் ‘‘இங்கிலாந்து நாட்டில் லண்டன் நகரிலிருந்து வெளியாகும் ‘டைம்ஸ்’ ஏடு உலகப்புகழ்பெற்ற பத்திரிக்கைகளில் ஒன்றாகும். அதில் என்னுடைய ‘காகிதப்பூ’ நாடகத்தைப் பற்றி வந்த பாராட்டுரையே என் நெஞ்சில் தேனை வார்த்திட்ட செய்தியாகும்’’

(நெஞ்சுக்கு நீதி[7], முதல் பாகம், கலைஞர் மு. கருணாநிதி, திருமகள் நிலையம் சென்னை-17) என்று தனது மகிழ்வைப் பதிவுசெய்துள்ளார்.

தொடர்ந்து தமது கொள்கைகளை எடுத்துணர்த்தும் வகையில் மூடப்பழக்கங்களைச் சாடும் வகையில்,

“எவ்வளவு பெரிய அதிசயத்தையெல்லாம் கண்டுபிடிக்கிறானுங்க சாதாரண மனுஷங்க ஆயிரம் மைலுக்கு அந்தாண்டை பாடுகிறான் பேசுகிறான் ‘இங்கே காதிலே உழுது! உம்! இதைக் கண்டுபுடிச்சானே அவன்ல மனிஷன். வேப்பமரத்தைப் பாக்குறான். அவன் சோப் செய்றான். நம்ம பூஜை பண்றோம் ஆகாயத்துல கருடனைப் பாக்கிறான். அவன் அதைப்போலவே விமானம் செஞ்சி பறக்க விடுகிறான். நம்ம கருடனைப் பார்த்து கன்னத்துலே போட்டுக்கிறோம். தண்ணிக்குள்ள மீனைப் பார்த்தான். சப்மரின் செய்றான். நம்ம மச்சாவதாரம்னு கும்பிடுகிறோம். ‘‘அப்படினெல்லாம் அந்த துரை பேசினாரே. நல்லாத்தான் இருந்தது. நியாயமாகக் கூடத்தான் இருந்தது. உம்!’’

பரப்பிரம்மன்[8] திராவிடப்பண்ணை - (திருச்சி - 1954 - ப.17)

என்று ஆதிக்கத்தினையும் மூடப்பழக்கவழக்கங்களையும் எதிர்த்து எதிர்த்து பரம்பிரம்மன் நாடகத்தில் தேசியம்பிள்ளையின் வீட்டு வேலைக்காரன் குல்லா ரேடியோவைப் பற்றிக் கூறுவதாக அமைத்தவை போன்ற பல காட்சிகள் உண்டு.

பராசக்தி முத்தமிழறிஞருக்கு மிகவும் புகழ் கூட்டிய நாடகம். இவ்வரிசையில் சிறப்புடைய நாடகங்களாக அனார்கலி, உதயசூரியன், உன்னைத்தான் தம்பி, இளைஞர் குரல், காகிதப்பூ, ஒரே

ரத்தம், சிலப்பதிகாரம், சேரன் செங்குட்டுவன், சாம்ராட் அசோகன், சாக்ரட்டீஸ், சாந்தா, நச்சுக்கோப்பை, தூக்குமேடை, தேசியப்பிள்ளை, பரதாயணம், பரப்பிரம்மம், மணிமகுடம், மந்திரகுமாரி, மகான் பெற்ற மகான், வாழ முடியாதவர்கள், நானே அறிவாளி போன்ற பல வெற்றிப்படைப்புகள் வெளிவந்தன.

இவற்றுடன் இவரது நாடகப்பயணம் நிறைவு பெறவில்லை. நாடகத்தின் வளர்ச்சியில் திரைத்துறை நுழைந்து மிளிர்ந்ததனைப் போன்று முத்தமிழறிஞரின் நாடகத்தமிழும் நாடகமேடை கடந்து திரைத்துறையிலும் ஒளிவீசியது கதை வசனமாக. பாடலாகத் தந்தது மட்டுமின்றித் தம்மையே ஒரு நடிகராகவும் வெளிப்படுத்திப் பங்கு கொண்டமை இவரது பன்முகத்திறனின் உச்சம்.

**நிறைவுரை**

நாடகத்தைப் பற்றி முத்தமிழறிஞரே ‘‘நாடக இலக்கியம் போல் விரைந்து மனமாற்றம் உண்டாக்கக்கூடிய ஆற்றல் வேறு எதற்கும் இல்லை. அதனால் தான் அரசியல் கருத்துக்களைப் பண்பாடு கெடாமல் தரம் தாழாமல் அள்ளித் தெளிப்பதற்கு நாடக இலக்கியத்தைக் கருவியாகப் பயன்படுத்திக்கொண்டேன்’’ என்று பதிவுசெய்துள்ளார். இதன்மூலமும் மேற்சொன்ன செய்திகள் மூலமும் முத்தமிழறிஞரின் நாடகத்தமிழ் என்பது வெறும் பணத்திற்காக, ஆசைக்காக என்பதனைக் கடந்து தமிழின்மீது தான் கொண்ட தணியாத காதலை தனக்குக் கிடைத்தப் படைப்பாற்றல் மூலம் குறிப்பாக நாடகம் மற்றும் இன்றைய தேவையானத் திரையின் மூலம் வளர்த்துப் பயன் கொண்டார் என்பதுவே நாம் அறியும் உண்மை.

**துணைநூல் பட்டியல்**

1. தொல்காப்பியம், பாரிநிலையம், சென்னை
2. சங்க இலக்கியம், கழக வெளியீடு, திருநெல்வேலி
3. மு.வேங்கடசாமி நாட்டார், தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்
4. நாம் தமிழர் பதிப்பகம், சென்னை
5. திருக்குறள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை
6. கலைஞர் மு. கருணாநிதி, சிலப்பதிகார நாடக காப்பியம், பாரதி பதிப்பகம், சென்னை
7. கலைஞர் மு. கருணாநிதி, நெஞ்சுக்கு நீதி முதல் பாகம், திருமகள் நிலையம், சென்னை
8. கலைஞர் மு. கருணாநிதி, பரப்பிரம்மன், திராவிட பண்ணை, திருச்சி